# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.989/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சசிக்குமார் |
| Father's Name | : | சுப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் கரூர், காமாட்சியம்மன் கோவில், நடுத் தெருவில் குடியிருந்து இளம் வழக்கறிஞராக கரூர் நீதிமன்றத்தில் பணி செய்து வருகிறேன். 15.07.2025ம் தேதி இரவு சுமார் 10.45 மணியளவில் என்னுடைய நண்பரின் வாகனமான TN 47

BB 5774 என்ற ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை எனது வீட்டிற்கு முன்பு வழக்கமாக நிறுத்தும் இடத்தில் நிறுத்திவிட்டு, தூங்கச் சென்றேன். மறுநாள் 16.07.2025 ம் தேதி காலை சுமார் 05.00 மணியளவில் நான் வீட்டிற்கு வெளியே வந்து இருசக்கர வாகனத்தை பார்த்தபோது வாகனம் காணவில்லை. அக்கம் பக்கம் தேடிப் பார்த்தும் வாகனம் கிடைக்கவில்லை. இருசக்கர வாகனம் எனது நண்பர் ரகுராம் என்பவரின் வாகனமாகும். அதனால் அவருக்கு தகவல் தெரிவித்தேன். அவர் வர முடியாத காரணத்தால் 07.08.2025 ம் தேதி கரூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். இருசக்கர வாகனத்தின் மதிப்பு சுமார் ரூ.2,50,000/- இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர். அன்றைய தினம் மாலை கரூர் நகர போலிசார் இருசக்கர வாகனம் திருடிய நபரை பிடித்துவிட்டதாகவும், வாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாகவும் சொன்ன தகவலைக் கேள்விபட்டு காவல் நிலையம் சென்றேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள இருசக்கர வாகனம் என்னுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரிதான் இருசக்கர வாகனத்தை திருடியதாகவும், அவரிடமிருந்து வாகனத்தை கைப்பற்றியதாகவும் போலிசாார் கூறினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

காணாமல் போன வாகனம் என்னுடையது அல்ல என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் வாகனத்திற்க இன்சூரன்ஸ் இருந்ததா என்றால் இருந்தது. 20 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணம் என்ன என்றால் எனது நண்பர் வெளி நாட்டில் இருந்ததால் அவருக்கு தகவல் சொன்ன பிறகு அவருடைய அறிவுறுத்தலின்படி புகார் கொடுத்தேன். மேற்படி காரணத்தை நான் புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரியை போலிசார்

சொல்லித்தான் அடையாளம் தெரியும் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் என்பதால் என்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி ஒரு பொய்யான புகாரை எதிரி மீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.989/2025

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | நவீன் குமார் |
| Father's Name | : | ஜெயராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் பசுபதிபாளையத்தில் குடியிருந்து எச்டிஎப்சி வங்கியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் அசோக் என்பவர் கையொப்பம்

செய்தார். கடந்த 07.08.2025 ம் தேதி காலை சுமார் 07.00 – 07.15 மணியளவில் மெடிக்கல் ஷாப்பிற்காக நானும் அசோக்கும் சென்றுகொண்டிருநத்போது, சம்மந்தமாக கரூர் நகர போலிசார் இருசக்கர வாகனம் சம்பவ இடம் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், அசோக்கும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் பசுபதிபாளையத்தில் வசித்து வருகிறேன். சம்பவ நடந்த இடத்திற்கு எனது அப்பாவிற்கு மருந்து வாங்குவதற்காக சென்றேன். பசுபதிபாளையத்தில் மெடிக்கல் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக மெடிக்கல் கடைகள் 10.00 லிருந்து 10.30 மணிக்குதான் திறப்பார்கள் என்றால் சரிதான். புகார்தாரரை எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும். காவல் நிலையத்திற்கு என்னை வரவழைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

Page No.
Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.989/2025

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : தயாநிதி

Father's Name : பாலசுப்பிரமணி

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் பசுபதிபாளையத்தில் குடியிருந்து டெக்சில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல்

மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் சிவபிரகாஷம் என்பவர் கையொப்பம் செய்தார். 07.08.2025 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் லைட்ஹவுஸ் கார்னர் அருகே கடைக்கு சென்றபோது, போலிசார் அங்கிருந்தனர். அப்போது ஆஜர் எதிரி புல்லட் இருசக்கர வாகனத்தில் வந்தார். போலிசார் அவரை பிடித்தனர். அவரை விசாரித்தபோது நான் அங்கிருந்தேன். ஆஜர் எதிரி இரண்டு புல்லட் இருசக்கர வாகனத்தை திருடியதாகவும், ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை ஆஜர்படுத்தினார். மற்றொரு இருசக்கர வாகனத்தை பிஎஸ்என்எல் அலுவலகத்தின் முன்பு இருந்து ஆஜர் எதிரி சொன்னதன்பேரில் போலிசார் கைப்பற்றினார்கள். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 4 குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரி இரண்டு நபர்கள் சேர்ந்து இரண்டு வண்டிகளை திருடியதாக கூறினார்கள். போலிசார் என்னையும், ஆஜர் எதிரியையும் எங்கள் முன்னிலையில் விசாரித்தனர்.

**சாட்சி குவிமுச பிரிவு 161 க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 07.08.2025 ம் தேதி ஆஜர் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரிதான். மற்றொரு இருசக்கர வாகனத்தை குருதேவா ஓட்டி சென்றதாகவும், பிஎஸ்என்எல் அலுவலத்தில் நிறுத்தியிருந்ததை ஆஜர் எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலுத்தின் அடிப்படைடியல் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலுத்திலுள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

புகார்தாரரை எனக்கு தெரியாது. நான் பசுபதிபாளையத்தில் வசித்து வருகிறேன். லைட்ஹவுஸ்கார்னருக்கு நான் டீக்கடைக்கு வந்தேன். பசுபதிபாளையத்தில் டீக்கடை இல்லையா என்றால் நான் வேலைக்காக வந்தேன். ராயனூரை சேர்ந்த சிவப் பிரகாஷத்தை பார்க்க நான் லைட்ஹவுஸ்கார்னருக்கு வந்தேன். எனக்காக சிவப் பிரகாஷம் வெயிட் பண்ணார். நான் பாலு பேக்கரியில் டீ சாப்பிட்டேன். பாலு பேக்கரி எந்த திசையில் உள்ளது என்றால் திசை தெரியாது. பாலு பேக்கரி ஹாஸ்பிடல் பக்கத்தில் உள்ளது. ஹாஸ்பிடல் மெயின் ரோட்டில் உள்ளது. எதிரியாக சொல்லப்படுபவர் கிழக்கிலிருந்து மேற்கே வந்தார். கிழக்கிலிருந்து மேற்கே என்பது திருச்சி – கரூர் ரோடாகும். 3 போலிசார் இருந்தனர். எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியது சுமார் 1 மணி நேரம் இருக்கும். வாக்குமூலத்தை போலிசார் எதிரி சொல்ல சொல்ல எழுதினார்கள். மற்றொரு வாக்குமூலம் 11 1/2 மணியளவில் 1/2 மணி நேரம் எதிரி கொடுத்தார். நான் மொத்தம் 3 கையொப்பங்கள் செய்து கொடுத்தேன். புகார்தாரர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும், அதனால்தான் முன்னுக்குபின் முரணாக சொல்கிறேன் என்றாலும், எதிரியிடமிருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவிலை என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.989/2025

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சிவப் பிரகாஷ் |
| Father's Name | : | ராமு |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் ராயனூர் தெற்கில் குடியிருந்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. என்னுடன் தயாநிதி கையொப்பம் செய்தார். என்னிடம்

காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் தயாநிதி என்பவர் கையொப்பம் செய்தார். 07.08.2025 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் லைட்ஹவுஸ் கார்னர் அருகே நானும் எனது நண்பர் தயாநிதியும் நடந்து சென்றபோது போலிசார் மூன்று நபர்கள் அங்கிருந்தனர். ஆஜர் எதிரி புல்லட்டில் வந்தார். புல்லட்டின் பதிவெண் தற்போது ஞாபகமில்லை. ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்தனர். ஆஜர் எதிரி எங்கள் முன்னிலையில் ஓட்டி வந்த புல்லட் வாகனத்தை திருடி வந்ததாகவும், மற்றொரு வாகனத்தை திருடிய அவரது நண்பர் பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் இருப்பதாகவும், தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலிம் கொடுத்தார்.

2. ஆஜர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி போலிசார் எங்களையும் பிஎஸ்என்எல் அலுவலகத்திற்கு ஆஜர் எதிரி உடன் அழைத்துச் சென்றனர். அங்கிருந்த புல்லட் இருசக்கர வாகனத்தையு, எதிரி ஓட்டி வந்த புல்லட் இருசக்கர வாகனத்தையும் போலிசார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினர். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான நான் எனது வசம் உள்ள திருடிய TN 47 BB 5774 என்ற ராயல் என்பீல்டு கிளாசிக் இருசக்கர வாகனத்தை ஆஜர்படுத்துகிறேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

1. நான் போலிசார் விசாரணையில் சொன்னதைத்தான் நீதிமன்ற விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் ராயனூரை சேர்ந்தவர் ஆகும். புகார்தாரரை எனக்கு தெரியாது. நாங்கள் லைட்ஹவுஸ்கார்னருக்கு என்னுடைய வாகனத்தில் சென்றேன்.

லைட்ஹவுஸ்கார்னருக்கு நான் டிக்கடைக்கு சென்றேன். லைட்ஹவுஸ்கார்னரிலுள்ள பாலு பேக்கரிக்கு சென்றேன். பாலு பேக்கரி கரூர் – திருச்சி ரோட்டில் பஸ்டாப்பிற்கு உள்ளே தள்ளி உள்ளது என்றால் சரிதான். எதிரியாக சொல்லப்படுபவர் திருச்சியிலிருந்து கரூர் செல்லும் திசையில் சென்றார். 3 போலிசார் இருந்தனர். எதிரியிடமிருந்து கையொப்பம் வாங்கிய தாளில் போலிசார் எழுதினார்கள். எதிரி சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். போலிசார் 1/2 மணி நேரம் எழுதினார்கள். போலிசார் எங்கு வைத்து எழுதினார்கள் என்றால் ரோட்டில் வைத்து எழுதினார்கள். நான் போலிசாரிடம் 3 கையொப்பங்கள் செய்தேன்.

2. லைட்ஹவுஸ் கார்னரில் வைத்து இரண்டு கையொப்பங்கள் போலிசார் வாங்கினார்கள். மற்றொரு மூன்றாவது கையொப்பம் பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பாக வாங்கினார்கள். வண்டியை நிறுத்திவிட்டு பேக்கரிக்கு சென்றுவிட்டு வந்தபோதுதான் போலிசார் அழைத்தார்கள். லைட்ஹவுஸ் கார்னருக்கு அருகிலுள்ள ஒரு மகப்பேறு மருத்துவமனை முன்பு வண்டியை நிறுத்திவிட்டு பேக்கரிக்கு சென்றுவிட்டு வரும்போது போலிசார் எங்களை அழைத்தனர். காலை 09.40 மணிக்கு மகப்பேறு மருத்துவமனை முன்பு வண்டியை நிறுத்திவிட்டு பேக்கரிக்கு சென்றேன். சம்பவ இடமானது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். எங்களை தவிர வேறு யாரையும் போலிசார் விசாரிக்கவில்லையா என்றால் விசாரிக்கவில்லை. பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பாக இருந்த இருசக்கர வாகனத்தை எவ்வாறு கைப்பற்றினார்கள் என்றால் வண்டி அனாமத்தாக நின்றுகொண்டிருந்தது, அதை போலிசார் கைப்பற்றினார்கள். அந்த இடமும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பாக சென்ற நேரம் 12.00 இருக்கும். புகார்தாரர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும், அதனால்தான் முன்னுக்குபின் முரணாக சொல்கிறேன் என்றாலும், எதிரியிடமிருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவிலை என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**